பக்கங்கள் 17+4

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | மாசி 27 செவ்வாய்க்கிழமை 11.03.2025 | அதிர்வு 220

## பெண் வைத்தியர் மீது பாலியல் வன்கொடுமை

**அனுராதபுரம் வைத்தியசாலையின் வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பு**

அனுராதபுரம் போதனா வைத்திய சாலையின் பெண் வைத்தியரைக் கத்தி முனையில் அடையாளம் தெரியாத 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




**தேர்தலுக்குப் பின்னர்தான் மேயர், நகர பிதா, தவிசாளர் யார் என அறிவிப்பு**

# யாழில் சகல சபைகளிலும் தமிழரசு ஆட்சி அமைக்கும்

**கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சுமந்திரன் நம்பிக்கை**

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

"யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி இம்முறை ஆட்சி அமைக்கும் என்ற உறுதியான நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. இந்தத் தடவை தேர்தலின்போது மேயர், நகர பிதா மற்றும் தவிசாளர் யார் என அறிவிப்பதில்லை என்று தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது. ஆகையினால் தேர்தலுக்குப் பின்னர்தான் அது யார் என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். அநேகமாகப் புதியவர்கள் பலர் கட்டாயம் நியமிக்கப்படுவார்கள்." 03

# வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு இப்போதாவது நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் அரசு

**நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து**

நாட்டில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு இப்போதாவது நியாயத்தைப் பெற்றுக் கொடுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அநுர அரசிடம் வலியுறுத்தினார்.

நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் இன்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பி உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"வேலையில்லாப் பிரச்சினைக்கும், கல்வி முறைக்கும் இடையே நிலவும் பொருத்தமற்ற சுழற்சி இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே அமைந்து காணப்படுகின்றன. அரசியலில் கைக்கூலிகளாக மட்டுமே இருக்கும் வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினை மீண்டும் பிரதான 02



# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி யாழ்ப்பாணத்தில் கையெழுத்துப் போராட்டம்





(எஸ்.நிதர்ஷன்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி யாழ்ப்பாணத்தில் இன்று கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மக்கள் பேரவைக்கான இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக இன்று காலை இந்தப் போராட்டம் நடைபெற்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் எனக் கோரி மக்கள் பேரவைக்கான இயக்கத்தினர் நாடு முழுவதும் கையெழுத்துப் பெறுகின்ற போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இதன் தொடராக யாழ்ப்பாணத்திலும் கையெழுத்துப் பெறும் போராட்டத்தை இன்று மேற்படி இயக்கத்தினர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**வேலையில்லா...**

பேசு பொருளாக மாறியுள்ள பின்னணியில், நான் பின்வரும் கேள்விகளைக் கேட்கின்றேன். சரியான பதில்களையும் விளக்கங்களையும் அரசிடம் இருந்து எதிர்பார்க்கின்றேன்.

01. இலவசக் கல்வியின் கீழ் ஆரம்ப, இடைநிலை மற்றும் உயர் நிலை என ஒவ்வொரு நிலைக்கும், ஒரு மாணவருக்கு அரசு ஆண்டுக்கு எவ்வளவு தொகையைச் செலவழிக்கின்றது? இது தொடர்பாக அரசு அங்கீகரிக்கப்பட்ட ஆய்வேதையும் மேற்கொண்டுள்ளதா?

02. உயர் தரத்தில் கலை, வணிகம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களில் பயிலும் மாணவர்கள், தங்கள் பட்டப்படிப்பு முடிவடையும் திகதியிலிருந்து வேலை கிட்டும் வரை எடுக்கும் காலம் தொடர்பில் அரசு முன்னெடுத்த ஏதேனும் ஆய்வுகள் உண்டா? அவ்வாறானால், எடுக்கும் காலத்தை தனித்தனியாக குறிப்பிடவும்?

மேலும், இதுவரை 580 சுதேச மருத்துவ பட்டதாரிகள் தங்கள் பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளனர். இவர்களுக்குத் தொழில் பயிற்சி வழங்க அரசு இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. இவர்களுக்குரிய தொழில் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

03. வேலையற்ற பட்டதாரிகள் எத்தனை பேர் உள்ளனர்? இந்தப் பட்டதாரிகளில் வெளிவாரி, உள்வாரி, திறந்த மற்றும் தனியார் பல்கலைக்கழக பட்டதாரிகள் எத்தனை பேர் உள்ளனர்? பட்டதாரிகளின் எண்ணிக்கையை அவர்கள் பெற்ற பட்டப்படிப்புக்கு ஏற்ப தனித்தனியாக முன்வைக்க முடியுமா? தொழில் சந்தையில் நுழைய முடியாமல் எந்த அடிப்படையில் அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள்? இது குறித்து அரசாங்கம் மேற்கொண்ட ஆய்வுகள் என்ன? அவற்றை சபையில் முன்வைப்பீரா?

04. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் 72 ஆவது பக்கத்தில் வேலையில்லா பட்டதாரிகள் 35 ஆயிரம் பேருக்கு முறையான ஒழுங்கின் கீழ் துரிதமாக வேலை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், எத்தனை பட்டதாரிகளை இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது? இவை எந்தெந்த துறைகளுக்கு? இந்த ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் இதற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது? வேலை தேவைப்பாட்டின் அடிப்படையில், அரசு அவர்களை ஏதாவது தகுதி அடிப்படையிலா இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கின்றது? இல்லையென்றால், ஏதேனும் போட்டிப் பரீட்சை மூலமாகவா?

05. கலைப் பட்டதாரிகளில் பெரும்பாலானோர் பட்டப்படிப்புக்குப் பிறகு வேலை தேடும் நெருக்கடியில் இருந்து வருவதால், இந்த நிலையை முடிவுக்கு கொண்டு வர இதுவரையில் அரசு முன்வைத்துள்ள கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகள் யாவை?

தற்போதைய அரசு வாக்குறுதியளித்தபடி, இந்தப் பட்டதாரிகளுக்கு 45 வயது வரம்பைப் பொருட்படுத்தாமல் போட்டிப் பரீட்சைகளில் தோற்றுவதற்கு அனுமதியளிக்க வேண்டும். இந்த வேலையில்லாப் பட்டதாரிகளைத் தொடர்பு கொண்டு, அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குங்கள்." – என்றார்.

வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினைகள் தொடர்பில் அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்பிய சந்தர்ப்பத்தில், இதற்கான பதிலை பின்னர் முன்வைப்பதாக ஆளுந்தரப்பினர் தெரிவித்தனர்.

"இதற்குப் பதில் வழங்க அரசு கால அவகாசம் கேட்பது நியாயமற்றது. ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்ட உரையில் இந்த 35 ஆயிரம் பேருக்குமான பதில்கள் இருக்க வேண்டும். இதற்குப் பதிலளிக்க அரசு கால அவகாசம் கேட்டதன் மூலம், இந்தப் பிரச்சினைக்கு பதில் அளிக்காமல் அரசு வேண்டுமென்றே புறக்கணிப்பதாகவே தோன்றுகின்றது." – என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# தமிழரசுக் கட்சியில் இணைந்தார் ரெலோவின் முக்கியஸ்தர் விந்தன்




(எஸ்.நிதர்ஷன்)

ரெலோ கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான விந்தன் கனகரட்ணம், இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இணைந்துகொண்டுள்ளார்.

ரெலோ கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக இருந்து முன்னாள் யாழ்ப்பாணம் மாநகர சபை மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினராக இருந்த விந்தன் கனகரட்ணத்துக்கும் கட்சிக்கும் இடையில் அண்மைக்காலமாக முரண்பாடுகள் ஏற்பட்டு வந்திருந்தன.

இந்நிலையில், திடீரென நேற்று அவரும், அவரது மகனும் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் முன்னிலையில் தமிழரசுக் கட்சியில் இணைந்து உறுப்புரிமைகளையும் பெற்றுக்கெண்டனர்.

ரெலோவின் ஆயுதப் போராட்டம் முதல் அரசியல் பயணம் வரை நீண்டகால உறுப்பினர் மட்டுமல்லாது அந்தக் கட்சியின் முக்கியஸ்தராகவும் விளங்கி வந்த விந்தன் கனகரட்ணம் திடீரென அந்தக் கட்சியில் இருந்து வெளியேறி தமிழரசுக் கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டமை தமிழ்க் கட்சிகளிடத்தே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழில் சகல...

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் பதில் பொதுச்செயலாளருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அனைத்து சபைகளிலும் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை யாழ். தேர்தல் திணைக்களத்தில் இன்று இலங்கைத் தமிழரசுக் கட்சி செலுத்தியது. இந்தக் கட்டுப்பணத்தைக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் செலுத்தினார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கலைச் செய்வதற்கான கட்டுப்பணத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சி இன்று செலுத்தியுள்ளது.

இந்த மாவட்டத்தில் உள்ள 17 சபைகளிலும் போட்டியிடுவதற்குக் கட்டுப்பணத்தைச் செலுத்தியதுடன் வேட்புமனுப் படிவங்களையும் பெற்றுக்கொண்டுள்ளோம்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 17 சபைகளிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி இந்த முறை நிர்வாகத்தை அமைக்கும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இந்தத் தேர்தலில் நாங்கள் போட்டியிடுகின்றோம்.

இந்தத் தடவை தேர்தலின்போது மேயர், நகர பிதா மற்றும் தவிசாளர் யார் என அறிவிப்பதில்லை என்று தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது. ஆகையினால் தேர்தலுக்குப் பின்னர்தான் அது யார் என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும். அநேகமாகப் புதியவர்கள் பலர் இம்முறை கட்டாயம் நியமிக்கப்படுவார்கள்.

தமிழரசுக் கட்சிக்கு அதிகமான வேட்பாளர்கள் இருக்கின்றார்கள். அவ்வாறு அதிகமானவர்கள் இருப்பதால் யாரை நிறுத்துவது என்பதில் இழுபறி நிலை இருக்கின்றது.

அது வழமையாக எங்களுக்கு இருக்கின்ற ஒரு பிரச்சினைதான். முதன்மையாக இருக்கின்ற கட்சிகளில் போட்டியிடுவதற்குப் பலர் ஆர்வம் காட்டுவார்கள். இதனால் எமக்கு இழுபறி வந்தாலும் அதனை நாங்கள் சுமுகமாகத் தீர்த்துக்கொண்டு யார், யார் வேட்பாளர்கள் என்பதைத் தீர்மானிப்போம்." – என்றார்.

### பெண் வைத்தியர் மீது...

நபர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்தார் எனக் கூறப்படும் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த வைத்தியசாலையின் வைத்தியர்கள் இன்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வைத்தியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட 32 வயது பெண் வைத்தியர் நேற்று மாலை தனது கடமைகளை முடித்துவிட்டு, அரசால் வைத்தியர்களுக்காக வழங்கப்பட்ட அவரின் தங்குமிடத்துக்குச் சென்றுள்ளார்.

பின்னர் மாலை 6:30 மணி முதல் 7 மணி வரையான காலப்பகுதியில் அடையாளம் தெரியாத ஒருவர் அவரின் தங்குமிடத்துக்குச் சென்று, கத்தியைக் காட்டி மிரட்டி, பாலியல் வன்கொடுமை செய்தார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அனுராதபுரம் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# ரி - 56 ரக துப்பாக்கி மீட்பு: சஞ்சய சிறிவர்தன கைது!

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சஞ்சய சிறிவர்தன இன்று செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அத்தனகல்ல பகுதியில் உள்ள சஞ்சய சிறிவர்தனவுக்குச் சொந்தமான காணியில் ரி – 56 ரக துப்பாக்கி, 2 மகசின்கள், 130 தோட்டாக்களைப் பொலிஸார் இன்று கண்டெடுத்ததையடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, அந்தப் பகுதியில் மறைத்துவைக்கப்பட்டுள்ள மேலும் சில துப்பாக்கிகளைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.






# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

## மூவர் படுகாயம்

நாவுல – பக்கமூன வீதியில் மொரகஹகந்த பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று நாவுல பொலிஸார் தெரிவித்தனர்.

கொன்கஹவெல பிரதேசத்தில் நடைபெற்ற இறுதிச் சடங்கு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு மீண்டும் வீடு நோக்கிப் பயணித்த சிறிய லொறி ஒன்று மற்றுமொரு லொறியின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தின் போது, சிறிய லொறியின் சாரதியும், அதில் பயணித்த குழந்தையும், இரண்டு ஆண்களும், பெண் ஒருவரும் படுகாயமடைந்த நிலையில் பக்கமூன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் ஹிங்குரக்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 47 வயதுடைய ஆணும், 41 வயதுடைய பெண்ணும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவுல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பஸ் மிதிபலகையில் பயணித்த வயோதிபர் கீழே வீழ்ந்து மரணம்

பஸ் மிதிபலகையில் பயணித்த வயோதிபர் ஒருவர் கீழே தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து ருவன்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹம்பஸ்வலான பகுதியில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் ஹம்பஸ்வலான, ருவன்வெல்ல பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய வயோதிபர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ருவன்வெல்லவில் இருந்து தனொருவ நோக்கிப் பயணித்த பஸ் ஒன்றின் முன் பக்கத்தில் உள்ள மிதிபலகையில் பயணித்த வயோதிபர் கீழே தவறி வீழ்ந்து படுகாயமடைந்தார்.

அவர் கரவனெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த வயோதிபர் சுகவீனம் காரணமாக பஸ் மிதிபலகையில் அமர்ந்திருந்த நிலையில் திடீரென கீழே தவறி வீழ்ந்துள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மேற்படி வயோதிபரின் சடலம் கரவனெல்ல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

ருவன்வெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்ய மாத்தறை நீதிமன்றால் பகிரங்கப் பிடியாணை

## வெளிநாட்டுப் பயணத் தடையும் விதிப்பு

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைக் கைது செய்யுமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு இன்று செவ்வாய்க் கிழமை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேசபந்து தென்னக் கோனுக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத் தடையும் விதிக்கப்பட்டுள் ளது.

2023 ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம பகுதியில் உள்ள ஹோட்டல்



ஒன்றின் மீது துப்பாக்கிச்சூடு நடத் தப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென் னக்கோனைக் கைது செய்து நீதி மன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மாத் தறை நீதிவான் நீதிமன்றத்தால் கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந் தது.

இந்நிலையில், தேசபந்து தென்னக் கோனைக் கைது செய்ய பொலிஸார் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# உள்ளொன்று, புறமொன்று...!

எது பயங்கரவாதம் என்ற கேள்விக்கு சரியான வரைவிலக்கணம் இல்லை. 'வல்லான் வகுத்ததுதான் சட்டம்' என்ற ரீதியில் பயங்கரவாதமும் அர்த்தப்படுத்தப்படுகின்றது. விடுதலைப் போராட்டங்கள் எல்லாம் பயங்கரவாதங்களாக சித்திரிக்கப்படுகின்றன. நீதி, நியாயமான - உரிமைகளுக்கான - வாழ்வியலுக்கான - போராட்டங்களை அடக்குமுறை சக்திகள் 'பயங்கரவாதமாக' சித்திரிக்கும் பண்பியல்பு உலக வழக்கமாகவும் தாராளமுமாகிவிட்டது. அது பற்றிய அனுபவப்பாடம் ஈழத் தமிழர்களுக்கு உண்டு.

தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்திரித்த தென்னிலங்கை ஆட்சிப் பீடங்கள் தமிழர்கள் மீது அரச பயங்கரவாதத்தை ஏவி விட்டமை மறுக்கப்பட முடியாத உண்மை. இந்த பின்புலத்திலேயே பயங்கரவாதத்தை நோக்க வேண்டி உள்ளது.

இப்போது உலகில் மிகக் குறைந்த பயங்கரவாத அச்சுறுத்தல்கள் உள்ள நாடுகளில் ஒன்றாக இலங்கை பெயரிடப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய பயங்கரவாதத்தின் தாக்கம் குறித்து நடத்தப்பட்ட பகுப்பாய்வுகளின் அடிப்படையில், 2025ஆம் ஆண்டுக்கான உலகளாவிய பயங்கரவாத குறியீட்டால் இந்தத் தரப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

உலகளாவிய பயங்கரவாத குறியீடு என்பது சர்வதேச பொருளாதாரம் மற்றும் அமைதி நிறுவனம் பயங்கரவாதத்தின் தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட நாடுகள் குறித்து வழங்கும் தரவரிசை ஆகும்.

உலக மக்கள்தொகையில் 99.7 வீதம் பேரை உள்ளடக்கிய, 163 நாடுகளுக்கு பயங்கரவாதத்தின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்து, உலகளாவிய பயங்கரவாத குறியீடு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, உலகில் அதிக பயங்கரவாத ஆபத்து உள்ள நாடாக புர்கினா ற்சோ முதலிடத்தில் உள்ளது. பாகிஸ்தான் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது. பயங்கரவாத அச்சுறுத்தல் அதிகம் உள்ள நாடுகளில் சிரியா மூன்றாவது இடத்தில் உள்ளது.

இந்தக் குறியீட்டின்படி, பயங்கரவாத ஆபத்து மிகக் குறைந்த நாடாக, உலகளாவிய பயங்கரவாதக் குறியீட்டில் இலங்கை 100 ஆவது இடத்தில் இப்போது உள்ளது.

2023ஆம் ஆண்டில் இந்தக் குறியீட்டில் 36 ஆவது இடத்தில் இருந்த இலங்கை, 64 இடங்கள் பின்தங்கி, பயங்கரவாத அச்சுறுத்தல்களைக் குறைப்பதில் தெற்காசிய பிராந்தியத்தில் மிகவும் முன்னேறிய நாடாக இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

தெற்காசிய பிராந்தியத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் எந்தவொரு பயங்கரவாதத் தாக்குதல்களும் பதிவாகாத நாடுகளாக இலங்கை மற்றும் பூட்டான் பெயரிடப்பட்டுள்ளன.

மேலும் 2019 முதல் இலங்கையில் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் தொடர்ந்து குறைந்து வருவதாக தொடர்புடைய அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் பயங்கரவாத அச்சுறுத்தல் குறைந்து விட்டதாக கூறப்பட்டாலும், தமிழர் தாயகத்தை தென்னிலங்கை பௌத்த - சிங்கள ஆட்சிப் பீடங்கள் இன்னமும் இராணுவ மயப்படுத்தப்பட்ட கெடுபிடி அடக்குமுறைக்குள்தான் அடக்கி வைத்திருக்கின்றன. இலங்கையில் உள்ள 20 டிவிஷன் இராணுவத்தில் 16 டிவிஷன்கள் வடக்கு, கிழக்கில்தான் - தமிழர் தாயகத்தில்தான் - நிலை கொண்டுள்ளன. அதிக அளவு பாதுகாப்புச் செலவினத்திற்கு ஒதுக்கீடு செய்யும் இந்த நாட்டில், அந்தத் தொகை வடக்கு, கிழக்கை இராணுவமயப்படுத்தித் தொடர்ந்து அடக்குமுறையின் கீழ் அதனை வைத்திருக்கும் எத்தனத்துடன் தான் முன்னெடுக்கப்படுகின்றது என்பதே இன்றைய நிலைமை.

தன்னுடைய வர்த்தக நோக்கங்களையும் சுற்றுலா துறையையும் மேம்படுத்துவதற்காக பயங்கரவாதம் இல்லாத நாடு என்ற தொனியை வெளியே காட்டும் இலங்கை, உள்நாட்டுக்குள் தமிழர் தேசம் குறித்து வித்தியாசமான சிந்தனை போக்குடன் அணுகுவதுதான் இதில் உள்ள பெரும் துரதிஷ்ட உண்மை யாகும்.

# யுத்தத்தால் தடைப்பட்ட கைதடிக்கான போக்குவரத்து சேவையை ஆரம்பிக்குக!

## ஊராட்சி முற்றக் கூட்டத்தில் நிர்மலா மகேந்திரன் கோரிக்கை

**(த.சுபேசன்)**

யுத்த சூழலால் நிறுத்தப்பட்ட கைதடி வடக்கு மற்றும் கிழக்குப் பகுதி மக்களுக்கான போக்குவரத்துச் சேவையை மீளவும் ஆரம்பிக்க வேண்டும் என்று சாவகச்சேரிப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் பெண் பிரதிநிதிகள் சம்மேளன உறுப்பினருமான திருமதி நிர்மலா மகேந்திரன் இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் மாவட்ட மேலதிக அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற ஊராட்சி முற்ற நிகழ்வில் கலந்து கொண்டு சமூக மட்டப் பிரச்சினைகளை வெளிப்படுத்திய போதே அவர் மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,



தென்மராட்சிப் பிரதேசத்தின் கைதடிச் சந்தியில் இருந்து 4 கிலோ மீற்றர் தொலைவில் கைதடி வடக்கு மற்றும் கைதடி கிழக்கு ஆகிய இரு கிராமங்கள் காணப்படுகின்றன.

இங்கு 883 குடும்பங்களைச் சேர்ந்த 2591 அங்கத்தவர்கள் வசிக்கின்றனர். அதில் பாடசாலை மாணவர்கள், பெண் தலைமைக் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள், அரச உத்தியோகத்தர்கள் உள்ளடங்கின்றனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு வரை மேற்படி இரண்டு கிராமங்களுக்குமான போக்குவரத்துச் சேவை இடம்பெற்ற போதிலும் உள்நாட்டு யுத்த நிலைமை காரணமாக அந்தச் சேவை நிறுத்தப்பட்டு இன்றுவரை செயற்படுத்தப்படாத நிலைமை காணப்படுகின்றது.

இதனால் அரச உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பெண் தலைமைக் குடும்பங்கள், சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தமது கிராமத்தில் இருந்து 4 கிலோ மீற்றர் தூரம் நடந்தே கைதடி சந்தியை அடைய வேண்டியுள்ளது. இதனால் பெண்கள் பாதுகாப்புப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு இலங்கை போக்குவரத்துச் சபை மீளவும் கைதடி வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்கான போக்குவரத்துச் சேவையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

## உள்ளூராட்சி மன்ற வாகனங்களின்

# பழுதடைந்த வாகனங்கள் தொடர்பில் கரிசனை காட்டுகிறார் ஆளுநர்!

**(ஹஸ்பர் ஏ.எச்.)**


கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரட்ணசேகர மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதானிகளுக்கும் இடையே திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் ஜே.எஸ். அருள்ராஜ், கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இசட்.ஏ.எம். பைசல், கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



இந்தக் கூட்டத்தில், உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான பயன்படுத்த முடியாத வாகனங்களை ஏலம் விடுதல், வாகனங்களைப் பழுது பார்த்தல் மற்றும் பயன்படுத்துதல், ஜப்பானிய உதவியின் கீழ் வழங்கப்படும் கம்பேக்டர் இயந்திரங்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்குதல், கழிவு முகாமைத்துவம் மற்றும் தனியார் துறையுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் திட்டங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் வழங்கும் சேவைகளை நெறிப்படுத்துதல் மற்றும் வினைத்திறன்மிக்கதாக்குதல் குறித்து விரிவான கலந்துரையாடல்கள் நடைபெற்றன.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA




# மண்கும்பான் பள்ளிவாசலில் ரம்ழானை முன்னிட்டு சிரமதானம்

(த.சுபேசன்)

ரம்ழானை முன்னிட்டு அண்மையில் மண்கும்பான் பள்ளிவாசல் வளாகத்தில் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பால் “இயற்கையை நேசிப்போம பசுமையைப் பாதுகாப்போம்” எனும் மையப்பொருளில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது. அமைப்பின் தலைவர் ஏ.ஆர் அமீர்கானின் வழிகாட் டுதலில், அமைப்பின் பணிப்பாளர் அப்துல் பரிதி ஆரிப் தலைமையில் குளோபல் மிஷன் அமைப்பினரின் பங்களிப்பில் இந்தச் சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ஹட்டன் சிங்க மலைப் பகுதியில் பரவிய காட்டுத் தீயால் நாசம்!

**(மஸ்கெலியா)**

ஹட்டன் சிங்க மலைப் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயால் பல ஏக்கர் காடு எரிந்து நாசமாகியுள்ளது என்று ஹட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹெட்லி தோட்டத்தின் வனப்பகுதியில் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட தீ சிங்கமலை வனப்பகுதியில் பரவியது.

சிங்கமலை வனப்பகுதியானது ஹட்டன் நகருக்கு நீர் வழங்கும் பிரதான வனப்பகுதியாகும். தொடர்ந்து இவ்வாறான தீ பரவலில் குடி தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் நிலை உருவாகும் என நகர மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்த வனப்பகுதியில் இருந்து ஹெட்லி மற்றும் சலங்கத்தை பகுதியில் அமைந்துள்ள பல பெருந்தோட்டங்கள் மற்றும் டிக்கோயா, ஹட்டன் பகுதியில் அமைந்துள்ள ஆயிரகணக்கான குடும்பங்களுக்கு குடி தண்ணீர் பெறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.மிக அடர்ந்த காடு வறண்ட காலநிலை காரணமாக மிக வேகமாகத் தீ பரவியதால் பல ஏக்கர் காடு எரிந்து நாசமாகியது என்று ஹட்டன் வன பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இனம் தெரியாத விசமிகளால் தீ வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார் காடுகளுக்கு தீ வைப்போர் தொடர்பில் அறியத் தருமாறு பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



# திருகோணமலை கரையோர பகுதிகளில் மகளிர் தினத்தை முன்னிட்டு சிரமதானம்

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டுத் திருகோணமலை கரையோர ம ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்குச் சுத்தம் செய்யப்பட்டது.

நிகழ்வை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக கரையோர பாதுகாப்புத் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தது.

இதன்போது திருகோணமலை பிரதான கரையோர பகுதியில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகள், போத்தல்கள் உட்பட பல பொருள்கள் சுற்று சூழலில் இருந்து அகற்றப்பட்டன.

கரையோர பகுதிகளை சுத்தமாக வைத்திருக்கும் நோக்கில் இது நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதில் திருகோணமலை நகர சபைசட செயலாளர் ஜெயவிஷ்ணு, கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். தீபராஜ், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சைசதனி, மகளிர் சங்க பிரதிநிதிகள், ஆசிய காப்புறுதி நிறுவன ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# வேலணை - வங்களாவடி பிரதேச ஆஸ்பத்திரியின் ஆளணிப் பற்றாக்குறையை உடன் நிவர்த்தி செய்க!

## பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் அனுசியா வேண்டுகோள்

(த.சுபேசன்)

வேலணை– வங்களாவடி பிரதேச வைத்தியசாலையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய துறைசார் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேலணைப் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றப் பெண் பிரதிநிதிகள் சம்மேளன உறுப்பினருமான திருமதி ஜெ.அனுசியா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் மாவட்ட மேலதிக அரச அதிபர் தலைமையில், அரச அதிகாரிகளின் பங்குபற்றுதலோடு இடம்பெற்ற ஊராட்சி முற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,



தீவகப் பிரதேசத்தின் இரண்டாவது பிரதான வைத்தியசாலையாக இந்த வைத்தியசாலை காணப்படுகின்ற போதிலும் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக வைத்தியசேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறுகின்றன.

கடந்த அரசின் காலத்தில் இந்த வைத்தியசாலை “பி” தரத்துக்குத் தரமுயற்தப்பட்டுள்ள போதிலும் அதற்கான ஆளணி வளங்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எவையுமே இதுவரை முன்னெடுக்கபாபடவில்லை.

இரண்டு வைத்தியர்களே இங்கு நிரமிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் அங்கு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பணியாற்றி வருகின்றனர். தாதிய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையும் நீண்ட காலமாக நிலவி வருகின்றது.

வருடம் ஒன்றுக்குச் சுமார் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளி நோயாளர்களும், 1500 இற்கும் மேற்பட்டோர் விடுதிகளில் தங்கியும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நிலையில் உடனடியாக உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனமெடுத்து ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.



# கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம் மகளிர் தினத்தை முன்னிட்டுச் சிரமதானம்

(பாறுக் ஷிஹான்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பாரிய சிரமதானத்தை கல்முனை தலைமையக பொலிஸ் நிலையம் மேற்கொண்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட மணல்சேனை சுவாமி விபுலானந்தா வித்தியாலய சூழலில் குறித்த சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

“கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்துடன் இணைந்ததாக பெண்கள் சங்க உறுப்பினர்கள், பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இது இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசார் நெறிப்படுத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சீன் பக்கீர் வழிகாட்டுதலில் சமூகப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ.வாஹிட் தலைமையில் சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தின் சுற்றுச் சூழல் பிரிவு, சமூகப் பொலிஸ் பிரிவு,



சிறுவர் பெண்கள் விசாரணப் பிரிவு என்பன பங்கேற்றன.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்குடனும் டெங்கு நோயின் தாக்கத்தை இந்தப் பிரதேசத்தில் கட்டுப்படுத்தும் முகமாகவும் பாடசாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உள்ள குப்பை கூழங்கள் காடுமண்டிய இடங்கள் யாவும் துப்புரவு செய்யப்பட்டன.

இதன்போது வீதியோரங்களில் தேங்கிக் காணப்பட்ட கழிவுகளை பொலிஸார் அகற்றி சுத்தப்படுத்தினர்.



# தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலருணவு பொதிகள் வழங்கிவைப்பு

(ஏ.எச்.எம்.ஹாரீஸ், மத்திய முகாம்)

புனித ரம்ழான் மாதத்தை முன்னிட்டு நளீர் பௌன்டேசன் அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க அமெரிக்க சக்காத் பௌன்டேசன் அமைப்பால் தெரிவு செய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கு உலருணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

நளீர் பௌன்டேசன் அமைப்பின் ஸ்தாபக தலைவர் எம்.ஏ.நளீரின் அயராத முயற்சியால் அமெரிக்க சக்காத் பௌன்டேசனிடம் வேண்டிக் கொண்டதற்கிணங்க தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவு பொதிகள் பகிர்தளிக்கப்பட்டன.

நாவிதன்வெளி பிரதேசத்தில் இன, மதம் பாராமல் பல்வேறுபட்ட மனிதாபிமான உதவிகளை பல வருடங்களாக நளீர் பௌன்டேசன் அமைப்பு செய்து வருகின்றது.

இதனடிப்படையில் இவ்வுதவித்திட்டம் கொண்டுவரப்பட்டு சாளம்பைக்கேணி-01,02,03,04, மத்திய முகாம் ஆகிய பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன.

எதிர்வரும் காலங்களில் மேலும் சில பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கும் இவ்வுதவித் திட்டம் வழங்க வுள்ளார் என்று அதன் தலைவர் எம்.ஏ.நளீர் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து இப்தார் ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. இதில் சுமார் 100 இற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண டனர்.

# முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதிய பிரச்சினைக்குத் தீர்வு அவசியமானது!

## மகளிர் விவகார அமைச்சின் ஒத்துழைப்பும் அவசியம் என்கிறார் ரவிகரன் எம்.பி.

(விஜயரத்தினம் சரவணன்)

முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதியப் பிரச்சினைக்குத் தீர்வு தேவை எனவும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளத்தை அதிகரிக்க மகளிர் விவகார அமைச்சின் ஒத்துழைப்பும் அவசியம் என்றும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின்மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினரா ரவிகரன் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது அவர்மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,



முன்பள்ளிகளில் மிகவும் குறைந்த சம்பளத்தில் ஆசிரியர்களாக மகளிர்களே கடமையாற்றுகின்றனர்.

இவ்வாறு கடமையாற்றும் முன்பள்ளி ஆசிரியர்களுடைய ஒருமாத கொடுப்பனவு வெறும் 6000 ரூபா மட்டுமேயாகும். என்ன செய்வது, எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் தவிக்கின்றார்கள் முன்பள்ளி ஆசிரியர்கள். இது தொடர்பில் பலரும் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

மிகவும் சிறிய பிள்ளைகளுக்கு அறிவைப் போதிக்கும் ஒப்பற்ற சேவையாற்றுபவர்களாக இந்த முன்பள்ளி ஆசிரியர்கள் காணப்படுகிறார்கள்.

இந்த முன்பள்ளி ஆசிரியர்களின் ஊதியப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதற்கு மகளிர் விவகார அமைச்சரும் தம்மாலான ஒத்துழைப்புக்களை வழங்கவேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்களின் ஒப்பற்ற சேவைக்கு உரிய கொடுப்பனவு போதுமானதா? சற்று எண்ணிப்பாருங்கள். இந்த விடயத்தில் அரசு கவனம் செலுத்தவேண்டும். அதற்கு மகளிர் விவகார அமைச்சின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியம். - என்றார்.



# கற்பிட்டியில் பெண்களுக்கான இலவச சுயதொழில் பயிற்சி!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

கற்பிட்டியில் பெண்களுக்கான இலவச ஒரு வருட சுயதொழில் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு கற்பிட்டி செடோ நெனசல அலுவலகத்தில் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.ஜீ எஸ்.ஏ .அபே றுவான் தலைமையில் இடம்பெற்றது.



வடமேல் மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக கற்பிட்டி பிரதேச செயலகத்தின் வழி காட்டலின் கீழ் கற்பிட்டி செடோ நெனசலவின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள பெண்களுக்கான ஒரு வருட இலவச சுயதொழில் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு கற்பிட்டி பிரதேச பெண்கள் அபிவிருத்திச் உத்தியோகத்தர் ஜே.பீ சாந்திலதா, மாகாண பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வாயிஷா, இளைஞர் விவகார பொறுப்பதிகாரியும் செடோ ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளருமான ஏ.ஆர். முனாஸ், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். எஸ். நிஸ்வர், கற்பிட்டி பிரதேச செயலகத்தின் சமாதானம் தொடர்பான உத்தியோகத்தர் திருமதி டிஸ்னா மற்றும் கற்பிட்டி பிரதேசத்தில் பெண்களுக்கான இலவச தையல் பயிற்சிகளை முதன் முதலாக ஆரம்பித்து தொடர்ந்து செயற்பட்டு வரும் முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.கே ஆப்தீன் ஆகியோரின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சி நெறியின் முதலாவது பயிற்சி வகுப்பு எதிர்வரும் புதன்கிழமை (12) ஆரம்பிக்கப்படவுள்ளது. இப் பயிற்சி நெறியில் 22 வகையான உற்பத்திகள் பற்றிய பயிற்சி இடம்பெறவுள்ளது.



# மஸ்கெலியா வைத்தியசாலையில் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத் திட்டம்

(மஸ்கெலியா)

மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலை திட்டம் ராணி தோட்ட பிரிவில் உள்ள ஓல் எலயின்ஸ் கிறித்தவ தேவாலய பிரதம குரு எ.இமயின்ஸ் தலைமையில் இடம்பெற்றது.


நிகழ்வில் மாவட்ட வைத்திய அதிகாரி இர்ஷாட் மற்றும் மஸ்கெலியா பொலிஸ் நிலைய சார்சன் சதீஸ் மஸ்கெலியா பிரதேச சபையின் நகர சுத்திகரிப்பு மேற் பார்வையாளர் எஸ்.ஆனந்தன் மற்றும் நகர் வர்த்தகர்கள் வைத்திய சாலையில் உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் பெருந்தோட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள பகுதிகளில் இருந்த பற்றைகளை முழுமையாக அகற்றி சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.



சிரியாவில் சிறுபான்மையினர் மீது தொடரும் வன்முறை:

# கொடூரமாக பழிவாங்கப்படும் ‘அலவைட்’ மக்கள் !




ஐங்கரன் விக்கினேஸ்வரா

சிரியப் படைகளுக்கும் அசாத் சார்பு போராளிகள் இடையேயுமான மோதலில் பல நூறு பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. முன்னைய ஜனாதிபதி அசாத்தின் அலவைட் (Syrian Alawites) சிறுபான்மை மக்களும் லதாகியா மற்றும் டார்டஸ் இடங்களில் பாதுகாப்புப் படைகளைத் தாக்கியதாக கூறப்படுகிறது.

அலவைட் (Syrian Alawites) மக்களின் எண்ணிக்கை சுமார் 2.1 மில்லியன் சிரியாவில் உள்ளனர். இஸ்லாமிய மதத்தின் ஒரு பிரிவான அலவைட்டுகள், சிரியாவின் மக்கள் தொகையில் சுமார் 12 வீதம் உள்ளனர்.

அலவைட்டுகள் ஒரு தனித்துவமான மதக் குழுமமாவர். அலவைட்டுகள் சன்னி அல்லது ஷியா இஸ்லாத்தின் ஒரு பிரிவாக அல்லாமல், ஒரு தனி மதக் குழுவாகக் கருதப்படுகிறார்கள்.

**அலவைட் மீது தாக்குதல்**

சிரியாவில் அசாத் ஆட்சி வீழ்ந்ததில் இருந்து, குறிப்பாக ஹோம்ஸ், லதாகியாவில் தங்கள் சமூகம் கொடூர வன்முறை தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்று அலவைட் மக்கள் கூறுகின்றனர்.

புதிய ஆட்சியாளர்களான அல்-ஷரா சிரியாவை இன மத பேதமின்றி ஆட்சி நடத்துவதாக உறுதியளித்துள்ள நிலையில், குர்துகள், கிறிஸ்தவர்கள் ட்ரூஸ் போன்ற பிற சிறுபான்மை குழுக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அசாத்தின் ஆட்சியின் கீழ், அலவைட் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ராணுவம் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்தனர். சமீபத்திய வாரங்களில் நாட்டின் புதிய பாதுகாப்புப் படைகளுக்கு எதிரான தாக்குதல்களுக்கு அலவைட் விசுவாசிகள் மீது புதிய அரசு குற்றம் சாட்டியுள்ளது.

**யார் இந்த அலவைட்?**

அலவைட் (ளுலசயைெ யுடயறவைநள) மக்கள் சுமார் 2.1 மில்லியன் பேர் சிரியாவில் உள்ளனர். அவர்களின் மூதாதையர்கள் வடமேற்கு சிரியாவின் கடலோரப் பகுதியில் உள்ள விவசாய நுசைரி மலைத் தொடரில் இருந்து வெளியேறி வந்தனர் என்றும் கூறப்படுகிறது.

இஸ்லாமிய மதத்தின் ஒரு பிரிவான அலவைட்டுகள், சிரியாவின் மக்கள் தொகையில் சுமார் 12 வீதம் உள்ளனர். அலவைட்டுகள் ஒரு தனித்துவமான மதக் குழுமமாவர். அலவைட்டுகள் சன்னி அல்லது ஷியா இஸ்லாத்தின் ஒரு பிரிவாக அல்லாமல், ஒரு தனி மதக் குழுவாகக் கருதப்படுகிறார்கள்.

அலவைட்டுகளின் நம்பிக்கைகள் சன்னி மற்றும் ஷியா இஸ்லாம் இரண்டிலிருந்தும் கணிசமாக வேறுபடுகின்றன. இதில் தெய்வீக நபிகள் நாயகம் மற்றும் அலியின் பங்கு பற்றிய அவர்களின் புரிதல் அடங்கும்.

அவர்களில் பெரும்பான்மையானோர் ஹோம்ஸ் மற்றும் ஹமாவின் உள்நாட்டு சமவெளிகளில் கணிசமான அலவைட் இன சமூகங்கள் வாழ்ந்துள்ளனர் என கூறப்படுகிறது.

இருபதாம் நூற்றாண்டுவரை அலவைட்டின் ஒன்பதாம் நூற்றாண்டின் நிறுவனர் முஹம்மது இபின் நுசைருக்குப் பிறகு பொதுவாக நுசைரிஸ் என அழைக்கப்பட்டார்கள்.


அலி மீதான பக்தியின் மூலம் அவர்கள் இந்த மதப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதைக் குறிக்க அலவைட் இந்த பெயரை ஓரளவு ஏற்றுக்கொண்டார்கள்.

**சிரியப் படைகள் - அசாத் சார்பு போராளிகள் மோதல்**

அண்மையில் சிரியாவில் பாதுகாப்புப்

தொடர்ச்சி▼

# கொடூரமாக பழிவாங்கப்படும் ‘அலவைட்’ மக்கள் !




**தொடர்ச்சி▲**

படையினர், நாட்டின் கடலோரப் பகுதியில் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஜனாதிபதி பஷர் அல் –அசாத்துக்கு விசுவாசமான ஆயுததாரிகளுடன் சண்டையிட்டுள்ளனர். கடந்த ஆண்டு எதிர்க்கட்சிப் போராளிகள் ஆட்சியைக் கவிழ்த்ததில் இருந்து மிகக் கொடூரமான வன்முறையில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

சிரியாவின் அலவைட் மக்களின் கோட்டையான லதாகியா மற்றும் டார்டஸ் இடங்களில் பாதுகாப்புப் படைகளைத் தாக்கினர் என்றும் பலர் கொல்லப்பட்டனர் எனவும் கூறப்படுகிறது. மேலும் இந்த தாக்குதலில் இறப்பு எண்ணிக்கையை வெளியிடவில்லை.

ஆனால் மனித உரிமைகளுக்கான போர் கண்காணிப்பு சிரிய கண்காணிப்பு பிரிவு, இரண்டு நாள் சண்டையில் 580 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இறந்தவர்களில் பாதுகாப்புப் படையினர், துப்பாக்கி ஏந்தியவர்கள் மற்றும் பொதுமக்கள் அடங்குகின்றனர் என்று கூறியுள்ளது.

இதேவேளை, பெய்ரூட்டை தளமாகக் கொண்ட அல் மயாதீன் டிவி, பெண்கள் மற்றும் குழந்தைகளிடம் இருந்து பிரிக்கப்பட்ட பின்னர் முக்தாரியாவில் 30 இற்கும் மேற்பட்ட ஆண்கள் கொல்லப்பட்டனர் என்று கூறியுள்ளது.

**அமைதிக்கு அச்சுறுத்தல்**

லதாகியாவின் பொலிஸ் அதிகாரி ஒருவர், தற்போது இந்த நகரம் பாதுகாக்கப்பட்டது என்றும் இராணுவம் மற்றும் பாதுகாப்பு தளங்கள் மீதான முற்றுகை நீக்கப்பட்டது எனவும் கூறினார். இதற்கிடையில் மற்றைய இடங்களில் இன்னமும் மோதல்கள் தொடர்கின்றன.

அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கு தற்போதய சிரிய நிர்வாகம் போராடி வருகிறது. இடைக்கால ஜனாதிபதி அஹ்மத் அல் – ஷாராவின் கட்டுப்பாட்டை நீக்க ஒருங்கிணைக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கவை வலியுறுத்தியுள்ளார்.

ஆனால் முன்னைய அசாத் ஆதரவு மக்கள், மாஸ்கோவில் இருந்து பாதுகாப்புக் கேட்டு சிரியாவில் உள்ள ஜப்லே நகருக்கு அருகில் உள்ள முக்கிய ரஷ்ய விமானத் தளத்துக்கு வெளியே வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**சிரியாவில் ரஷ்ய தலையீடு**

2015 இல் சிரிய போரில் ரஷ்யா நேரடியாகத் தலையிட்டது. அசாத் அரசு பக்கம் ரஷ்யா சாய்ந்தது. இருப்பினும் ரஷ்யா அவரது வீழ்ச்சிக்குப் பிறகு புதிய அதிகாரிகளுடன் தொடர்புகளை மீண்டும் திறந்து கொண்டது.

2024 டிசெம்பரில் சிரியாவை விட்டு வெளியேறிய முன்னாள் அதிபர் அல்–அசாத் தற்போது மாஸ்கோவில் வசிக்கிறார்.

ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா, சிரியா நிலைமைகளை கவனித்து வருகிறார் என்று கூறியுள்ளார்.

தற்போது செல்வாக்குச் செலுத்தக் கூடிய அதிகார பூர்வ சிரியத் தலைவர்கள் இந்த இரத்தக்களரிக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க தங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

முன்னைய அல்–அசாத்தின் நீண்டகால ஆதரவாளரான ஈரான் அரசு, சிரியாவில் வன்முறை பிராந்திய ஸ்திரமின்மையை ஏற்படுத்தக்கூடும் என்று எச்சரித்துள்ளது.

சிரியாவில் பாதுகாப்பின்மை, வன்முறை, அப்பாவி சிரியர்களைக் கொல்வது மற்றும் தீங்கு விளைவிப்பதை ஈரான் கடுமையாக எதிர்க்கிறது. மேலும் இது பிராந்திய ஸ்திரமின்மைக்கு ஒரு ஊக்கியாகப் பார்க்கிறது என்று ஈரான் தெரிவித்துள்ளது.

**தூக்கிலிடப்பட்ட அலவைட்கள்**

போர் கண்காணிப்பு குழு, சிரிய பாதுகாப்புப் படையினர் அலாவைட் மக்களை தூக்கிலிட்டனர் என்று குற்றம் சாட்டியுள்ளது. சிரிய பாதுகாப்புப் படைகள் லதாகியாவின் கடலோர மாகாணத்தில் அலாவைட் சிறுபான்மையினரைச் சேர்ந்த பலரை தூக்கிலிட்டனர் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு அமைப்பு இந்தப் பிராந்தியத்தில் கொடூர களத்தண்டனைகளில் 582 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று கூறியது.

கடந்த ஆண்டு டிசெம்பரில் அசாத்தை பதவியில் இருந்து அகற்றிய சிரியாவின் புதிய ஆட்சியாளர்கள், முன்னாள் ஜனாதிபதியின் சொந்த நகரமான கர்தாஹாவில் தற்போது ராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டு வருவதாகக் கூறினர்.

இதன் காரணமாக அரச படைகளுக்கும், அசாத்துக்கு விசுவாசமான போராளிகளுக்கும் இடையிலான மோதல்களைத் தொடர்ந்து, 570 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

ஹோம்ஸ், லதாகியா மற்றும் டார்டஸ் நகரங்களில் தொடர் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு சண்டை மேலும் வெடித்துள்ளது. மேலும் இந்த மாகாணத்துக்கான அனைத்து அதிகாரமும் துண்டிக்கப்பட்டுள்ளது என்று லதாகியாவின் ஆளுநர் கூறியுள்ளார்.

சிரியாவுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புத் தூதுவர் கெய்ர் பெடர்சன், மோதல்கள் மற்றும் கொலைகள் பற்றிய அறிக்கைகளால் தாம் மிகவும் கவலையடைந்துள்ளார் என்று ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**முழு பிராந்தியத்திலும் இரத்தக்களரி!**

முதல் தொடரும் இந்தப் பகுதி அலாவைட் சிறுபான்மையினரின் மையப் பகுதியாகவும், அசாத் குடும்பத்தின் கோட்டையாகவும் இருந்தது. இந்த தொடர் வன்முறையில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையின் மதிப்பீடுகள் வேறுபடுகின்றன. கடந்த ஆண்டு டிசெம்பரில் அசாத் கவிழ்க்கப்பட்டதில் இருந்து மிக மோசமான இரத்தக்களரி இதுவாகும்.

இந்த மோதல்கள் முழு பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையையும் அச்சுறுத்துகிறது என்று துருக்கியும் ரஷ்யாவும் எச்சரித்துள்ளன. மேலும் இந்த மோதல்களுக்குப் பிறகு வன்முறைச் சூழலை தவிர்க்குமாறு சிரியாவை ஜேர்மனி அரசும் வலியுறுத்தியுள்ளது.

# இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை வலியுறுத்தி பாரிய போராட்டம்

இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வை வலியுறுத்தி தமிழகத்தில் பாரிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்கப்போவதாக விஜயின் கட்சியான தமிழக வெற்றி கழகம் அறிவித்துள்ளது.

இந்த போராட்டத்தில் தலைவர் விஜய்யும் கலந்து கொள்ளவுள்ளார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அடுத்தவாரம் இந்த போராட்டம் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இதற்கான அனுமதியை தமிழக வெற்றி கழகம் பொலிஸாரிடம் முன்வைத்துள்ளது.

தமிழக வெற்றி கழகத்தின் கடலூர் மாவட்ட நிர்வாகிகள் இந்த போராட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, மதநல்லிணக்கம் தொடர்பாக தி.மு.க. அரசின் சாயம் வெளுக்கிறது. நல்லிணக்கப் பேரணிக்கு அனுமதி மறுப்பது எந்த வகையில் நியாயம்?" என விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் ராஜ் மோகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"மதநல்லிணக்கம் தொடர்பாக தி.மு.க. அரசின் சாயம் வெளுக்கிறது.



அறவழிப் போராட்டம் என்பது அரசியல் அடையாளங்களில் ஒன்று. அதுவும் மதநல்லிணக்கம் பேண வலியுறுத்தும் பேரணியை எந்தக் கட்சி அல்லது அமைப்பு நடத்தினாலும், அது கட்டாயம் அனுமதிக்கப்பட வேண்டிய ஒன்று. மதநல்லிணக்க மக்கள் கூட்டமைப்பின் சார்பில் மதநல்லிணக்கப் பேரணியை மதுரையில் நடத்த அக்கூட்டமைப்பினர் அனுமதி கேட்டும், ஆளும் தி.மு.க. அரசு அனுமதி மறுத்திருக்கிறது. இதை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் மதுரையில் நடைபெற்ற அக்கூட்டமைப்பின் நிகழ்ச்சியில் விரக்தியோடு பேசி உள்ளார்.

மதநல்லிணக்கப் பேரணி நடத்த அனுமதி மறுத்தது என்பது, மதநல்லிணக்கம் தொடர்பாக இரட்டை வேடம் போடும் தி.மு.கவின் கபட நாடகத்தை தோலுரித்துக் காட்டுகிறது. நல்லிணக்கப் பேரணிக்கு அனுமதி மறுப்பது எந்த வகையில் நியாயம் என்பது தி.மு.க. அரசுக்கே வெளிச்சம். மத நல்லிணக்கப் பேரணிக்கு அனுமதி மறுக்கப்படும். ஆனால் பிளவுவாத அரசியல் செய்பவர்களுக்கு மட்டும் அனைத்து அனுமதியும் அளிப்பது என்பது இந்த தி.மு.க. அரசு தன் மறைமுகக் கூட்டணியை உறுதி செய்வதைத்தானே காட்டுகிறது.

வாய்வித்தையில் மட்டும் தமிழ்நாடு உரிமைகள், மதச்சார்பின்மை என்று கபடநாடகம் ஆடும் இந்த தி.மு.க. அரசால், பா.ஜ.க. மீதானத் தன்னுடைய மறைமுகப் பாசத்தை வெளிப்படுத்தாமல் இருக்க இயலவில்லை. பூனைக்குட்டி வெளியே வரத்தான் செய்கிறது. தி.மு.கவும் பா.ஜ.கவும் எல்லாமுறையிலும் மறைமுகக் கேளிர் என்பது, இது போன்ற செயல்களால் உறுதியாகவும் செய்கிறது. கொஞ்சம் கொஞ்சமாக இந்த தி.மு.க. அரசின் சாயம் வெளுக்கத் தொடங்கி உள்ளது. இதை அவர்களின் கூட்டணிக் கட்சியினர் மட்டுமன்று, தமிழக மக்களும் உணர்ந்தே வருகின்றனர். எல்லாவற்றிற்கும் சேர்த்து, 2026 இல் ஒரு நல்ல முடிவு எங்கள் கழகத் தலைவர் தலைமையிலான நல்லரசு வாயிலாக கிடைக்கத்தான் போகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.




## வெடிகுண்டு மிரட்டல்:

# அவசரமாக தரையிங்கிய ஏர் இந்தியா விமானம்!

நியூயோர்க்கிற்கு நேற்று புறப்பட்ட ஏர் இந்தியா விமானத்தின் கழிப்பறைக்குள் வெடிகுண்டு மிரட்டல் குறிப்பு கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, அவசரமாக மும்பைக்குத் திரும்பியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

19 பணியாளர்கள் உட்பட 322 பேரை ஏற்றிச் சென்ற போயிங் 777-300 ER விமானம், சத்ரபதி சிவாஜி மகாராஜ் சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்பாக தரையிறங்கியது.

இதையடுத்து விமானம் இப்போது பாதுகாப்பு சோதனைகளுக்கு உட்பட்டுள்ளது.

"விமானத்தில் வெடிகுண்டு உள்ளது" என்று கழிவறையில் எழுதப்பட்ட குறிப்பை ஒரு பயணி கண்டுபிடித்து உடனடியாக குழுவினருக்கு தகவல் அளித்துள்ளார்.

நிலையான பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றி, விமானத்தில் இருந்தவர்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளித்து, விமானிகள் மும்பைக்கு திரும்பிச் செல்ல முடிவு செய்தனர்.

ஒரு அறிக்கையில் ஏர் இந்தியா, பாதுகாப்பு அச்சுறுத்தலை உறுதிப்படுத்தியது, "தேவையான நெறிமுறைகளைப் பின்பற்றிய பின்னர் விமானத்தில் இருந்த அனைவரின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு விமானம் மும்பைக்குத் திரும்பியது" என்று குறிப்பிட்டுள்ளது.




# பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதி ரொட்ரிகோ டியுடெர்டே கைது!

பிலிப்பைன்ஸின் முன்னாள் ஜனாதிபதி ரொட்ரிகோ டியுடெர்டேயை அந்நாட்டு பொலிஸ் கைது செய்துள்ளது.

அவர் பதவியிலிருந்தபோது போதைப்பொருளுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது மனிதக் குலத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டி கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக் கப்படுகிறது.

ஆயிரக்கணக்கான பிலிப்பைன்ஸ் மக்களைக் கொன்று போதைப்பொருள்களுக்கு எதிரான இரத்தக்களரிப் போரை மேற்பார்வையிடுவதில் அவர் பங்காற்றினார் என தெரிவித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதி மணிலாவின் பிரதான விமான நிலையத்திற்கு வந்தவுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டுவரை தென்கிழக்கு ஆசிய நாட்டின் ஜனாதிபதியாக இருந்தபோது ரொட்ரிகோ போதைப்பொருள் எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

பிலிப்பைன்ஸில் உள்ள மனித உரிமைகளுக்கான சர்வதேச கூட்டணி இந்த கைது நடவடிக்கையை வர லாற்றில் மிக முக்கியமான தருணம் எனக் கூறியுள்ளது.



# எண்ணெய் தாங்கிக் கப்பலுடன் சரக்குக் கப்பல் மோதி விபத்து

## ஒருவர் மாயம்

பிரித்தானியாவின் கிழக்கு யோர்க்ஷயருக்கு அப்பாலான கடற் பகுதியில் எரிபொருள் தாங்கி கப்ப லொன்றும் சரக்கு கப்பலொன்றும் மோதிக்கொண்டதில் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

இந்த கப்பல்களிலிருந்து 30 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள் ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தையடுத்து நேற்று மாலை இரண்டு கப்பல்களும் தீப் பிடித்து எரிந்தன. மேலும் சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மதிப்பீடுகள் முன் னெடுக்கப்படவுள்ளன என தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சோலாங் என்ற கப்பலிலிருந்த பணிக்குழாம் உறுப்பி னர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

இரண்டு கப்பல்களிலும் இருந்து மொத்தமாக 36 பணிக்குழாம் உறுப்பி னர்கள் பாதுகாப்பாக கரைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர் எனவும் அவர்களில் ஒருவர் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என் றும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித் துள்ளன.

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 11/03/2025

### டொரொன்டோவில் சட்டவிரோத கஞ்சா விற்பனை இடம் சோதனை இரண்டு பேர் கைது

நோர்த் யோர்க் பகுதியில் உள்ள சட்டவிரோத கஞ்சா விற்பனை நிலையத்தில் சோதனை மேற்கொண்டு இரண்டு பேரை டொரண்டோ பொலிஸார் கைது செய்துள்ளனர். 02▶



# ட்ரூடோவை சந்தித்தார் கனடாவின் புதிய பிரதமர்

**கனடாவின் ஆளும் லிபரல் கட்சியின் தலைவராகவும், நாட்டின் அடுத்த பிரதமராகவும் மகத்தான வெற்றியைப் பெற்ற முன்னாள் மத்திய வங்கியாளர் மார்க் கார்னி, நேற்று ஜஸ்டின் ட்ரூடோவைச் சந்தித்துப் பேசினார்.**

**இதன்போது, அதிகாரத்தை முறையாக ஒப்படைப்பது விரைவில் நடைபெறும் என்று மார்க் கார்னி கூறினார்.**

**நீண்டகால கூட்டாளியான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை எதிர்கொள்ள கார்னி சிறந்த நபராக இருப்பார் என்று லிபரல் உறுப்பினர்கள் நம்பிக்கை வெளியிட்டனர்.**

கார்னி முறையாகப் பொறுப்பேற்கும் வரை ட்ரூடோ பிரதமராக கடமையாற்றுவார்.

இதனிடையே ட்ரூடோவை சந்தித்த பின்னர்,

"அந்த மாற்றம் தடையின்றி நடைபெறும், அது விரைவாக நடக்கும்" என்று கார்னி கூறினார்.

அதேநேரம், எதிர்வரும் வியாழன் அல்லது வெள்ளிக்கிழமை கார்னி பிரதமராக நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாக கனடாவின் குளோப் அண்ட் மெயில் செய்தித்தாள் தெரிவித்துள்ளது. அத்துடன், லிபரல் நாடாளுமன்றக் குழுவையும் சந்தித்த கார்னி, விரை வில் பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுப்பார் என்று லிபரல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.








# கனடாவில் துப்பாக்கிச் சூடு; இலங்கை பெண் உயிரிழப்பு

கனடாவின் மார்க்காமில் வசித்து வந்த இலங்கைப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் அந்த வீட்டில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணத்தின் முன்னாள் நகரபிதா ஆல்பிரட் துரையப்பாவின் பேத்தி எனத் தெரிவிக்கப்படுகிறது. 20 வயதுடைய ரகுதாஸ் நிலாக்ஷி என்ற பெண்ணே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம்கோண்டாவிலிருந்து கனடாவுக்குச் சென்ற இந்த பெண் இரண்டு வருடங்கள் அந்த வீட்டில் வசித்து வந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.



இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் அந்த வீட்டில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்த துப்பாக்கிச் சூட்டில் இந்த பெண்ணுடன் வசித்து வந்த ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

துப்பாக்கிதாரிகள் வீட்டைக் காத்துக்கொண்டிருந்த நாயையும் சுட்டுக் கொன்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நால்வர் கெப் ரக வாகனத்தில் தப்பிச் செல்வது சி.சி.டி.வி. கமெராவில் பதிவாகியுள்ளதாக கனேடிய பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

மேலதிக விசாரணைகளை கனடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




## டொரொண்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேக நபர்களிடமிருந்து ஓர் கைத் துப்பாக்கி ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஜேன் வீதி Jane Street மற்றும் ஷெப்பர்ட் வீதிக்கு Sheppard Avenue West அருகே உள்ள வணிக நிறுவனமொன்றில் பொலிஸார் சோதனை மேற்கொண்டனர்.

சந்தேகநபர்கள் இருவரும் அங்கிருந்த பணியாளர்களாக தோன்றியதாக பொலிசார் தெரிவித்தனர். அவர்களில் ஒருவர் தப்பிச் செல்ல முயன்றதாக கூறப்படுகிறது.

இருவரும் கைது செய்யப்பட்டதுடன் கஞ்சா, பணம் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யும்போது, சந்தேகநபர்களில் ஒருவரிடம் சுடுவதற்கு ஆயத்த நிலையில் தோட்டாக்கள் ஏற்றப்பட்ட துப்பாக்கியொன்று இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மொஹமட் அலி (வயது 29) மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நாம் நியூகியென் (வயது 19) மீது கஞ்சா விற்பனை நோக்கில் வைத்திருந்த குற்றச்சாட்டு மற்றும் சட்டவிரோத சொத்துகளை வைத்திருந்த குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.



# கனடாவில் நடைபெற உள்ள சந்திப்பில் எந்த அறிக்கையிலும் கையெழுத்து இல்லை

## அமெரிக்க வெளியுறவு செயலாளர் மார்கோ ரூபியோ கருத்து

கனடாவில் நடைபெற உள்ள சந்திப்பில், ரஷ்யா மீதான எதிர்ப்பு மொழியை அமெரிக்கா எதிர்க்கும் என்று வெளியுறவு செயலாளர் மார்கோ ரூபியோ தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் ரஷ்யா கைப்பற்றிய பிரதேசத்தில் இருந்து முழுமையாக வெளியேற வேண்டும் என ஐ.நா கொண்டு வந்த தீர்மானத்தில் ரஷ்யாவுக்கு ஆதரவாகவும், அதன் பெரும்பாலான நாடுகளுக்கு எதிராகவும் வாக்களித்த அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மாற்றியுள்ளார்.

இந்த நிலையில் கனடாவில் ஏழு வெளியுறவு அமைச்சர்கள் குழு கூடுகிறது. இதுகுறித்து அமெரிக்க வெளியுறவு செயலாளர் மார்கோ ரூபியோ ஜெட்டாவில் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

“இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவருவதற்கான எங்கள் நிலைப்பாட்டிற்கு இணங்காத எந்தவொரு அறிக்கையிலும் நாங்கள் கையெழுத்திட முடியாது என்பது இறுதியானது. இந்த நிலைப்பாடு யாருடைய பக்கத்தையும் எடுத்துக் கொள்வது பற்றியது அல்ல, ஆனால் விரோதமான மொழி சில நேரங்களில் கட்சிகளை பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வருவதை கடினமாக்கும் என்று நாங்கள் உணர்கிறோம்” என்றார்.

மேலும் பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய பணக்கார ஜனநாயக நாடுகளின் குழுவின் மற்ற உறுப்பினர்கள் வித்தியாசமாக உணர்ந்ததாக அவர் ஒப்புக்கொண்டார்.

அதே சமயம் அவர் அமெரிக்காவைப் பற்றி கூறும்போது, “அந்த மாதிரியான பேச்சுவார்த்தைகளை சாத்தியமாக்கும் நிலையில் இப்போது நாங்கள் மட்டுமே இருக்கிறோம்” என்றார்.

# இந்தியா உடனான உறவை மீண்டும் கட்டியெழுப்ப வாய்ப்புகள் உள்ளன

## கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி கருத்து



இந்தியா உடனான உறவை மீண்டும் கட்டியெழுப்ப வாய்ப்புகள் உள்ளது என்றும் அதனை தான் எதிர்நோக்குவதாகவும் கனடாவின் புதிய பிரதமராக பொறுப்பேற்க உள்ள மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், இந்தியா - கனடா உறவுகளில் தூதரக ரீதியில் பெரிய மாற்றம் ஏற்பட உள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கனடாவின் ஆளும் லிபரல் கட்சியின் புதிய தலைவரும், கனடாவின் அடுத்த பிரதமருமான மார்க் கார்னி, இந்தியா உடனான கனடாவின் வர்த்தக உறவை பன்முகப்படுத்த விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

ஜஸ்டின் ட்ரூடோவின் தலைமையின் கீழ் இந்தியா - கனடா இருதரப்பு உறவு மோசமடைந்த நிலையில், அதனை மீண்டும் கட்டியெழுப்ப விரும்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.




# கனடாவில் பராமரிப்பு பணியாற்ற விரும்பும் வெளிநாட்டு நபர்களுக்கு நிரந்தர குடியுரிமை

கனடாவில் பராமரிப்பு பணியாற்ற விரும்பும் வெளிநாட்டு நபர்களுக்கு, கனடிய வேலை அனுபவம் இல்லாத போதும் நிரந்தர குடியுரிமை வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

கனடாவின் வீட்டு பராமரிப்பு பணியாளர் குடிவரவு முன்னோடி திட்டங்களானது மார்ச் 31, 2025 முதல் நடைமுறைக்கு வருகின்றது.

இதற்கு முந்தைய வீட்டு குழந்தை பராமரிப்பு முன்னோடி மற்றும் வீட்டு உதவி பணியாளர் பைலட் திட்டங்கள் ஜூன் 17, 2024 அன்று முடிவடைந்தன.

இதன்படி, புதிய திட்டத்தின் கீழ் 15,000 இற்கும் மேற்பட்ட பராமரிப்பாளர்களுக்கு நிரந்தர குடியுரிமை வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் கனேடிய வேலை அனுபவம் தேவைப்படாமல் நிரந்தர குடியுரிமை எனவும், கனடாவின் கியூபெக் (Quebec) மாகாணத்தை



தவிர்த்து எங்கு வேண்டுமானாலும் வேலை செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

01. பணிக்கான தகுதிகள்

ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழிகளில் CLB-4 (Canadian Language Benchmarks) அல்லது NCLC-4 நிலை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

கனேடிய உயர்நிலைப் பள்ளி (high school) டிப்ளோமாவிற்கு சமமான கல்வித் தகுதி.

குறைந்தபட்சம் 6 மாதங்கள் தொடர்புடைய வேலை அனுபவம் அல்லது பயிற்சி சான்றிதழ்.

முழு நேர வீட்டுப் பராமரிப்பு வேலை வாய்ப்பை பெற்றிருக்க வேண்டும்.

02. விண்ணப்பிக்க வேண்டிய முறை

இரண்டு பிரிவுகள் - கனடாவில் வேலை செய்யும் நபர்கள் மற்றும் வேலை செய்யாத நபர்கள்

முதலில் கனடாவில் உள்ளவர்களுக்கான விண்ணப்பங்கள் மட்டும் ஏற்கப்படும்.

வேலை கிடைத்தவுடன் நிரந்தர குடியுரிமை உடனடியாக வழங்கப்படும்.

இந்த புதிய திட்டம் வீட்டுப் பராமரிப்பு தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை எளிதாக்கி, அவர்களின் குடும்பத்தாரும் குடியுரிமை பெறுவதற்கான வாய்ப்பை வழங்கும்.

# பங்களாதேஷ், இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கு 272.1 மில்லியன் டொலர் உதவி வழங்கும் கனடா

பங்களாதேஷ் மற்றும் இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கு 272.1 மில்லியன் கனடிய டொலர் (CAD) உதவி வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய சர்வதேச வளர்ச்சி அமைச்சர் அக்மேட் ஹுசேன் அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷுடனும் இந்தோ-பசிபிக் பகுதிகளுடனும் கனடாவின் நீண்டகால நட்புறவை இன்னும் வலுப்படுத்திக்கொண்டு வருகிறோம் என அவர் தெரிவித்துள்ளார்.

வென்கூவரில் நடைபெற்ற நிகழ்வில் ஹுசேன் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அதிருப்தியுறும் சமூகங்களின்



மருத்துவ சேவைகளை மேம்படுத்தவும், பெண்களை அதிகாரப்பூர்வமாக மாற்றவும், காலநிலை மாற்றத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் இந்த உதவித் தொகை செலவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவித்தொகை, பங்களாதேஷ் மற்றும் இந்தோ-பசிபிக் பகுதிகளில் உள்ள 14 திட்டங்களை நிதியளிக்க பயன்படுத்தப்பட உள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரம் மற்றும் உரிமைகள். பெண்களுக்கான கல்வி மற்றும் திறன் பயிற்சி வாய்ப்புகள். சமூகங்களை காலநிலை மாற்றத்துக்கு எதிராக தக்கவைக்க உதவும் திட்டங்கள், சிவில் சமூகத்தில் மக்கள் ஈடுபாட்டை அதிகரிக்கும் முயற்சிகள். வறுமையை குறைக்கும் திட்டங்கள் போன்ற திட்டங்களுக்காக இவ்வாறு நிதி உதவி வழங்கப்பட உள்ளது.

அமெரிக்கா உதவித் திட்டங்களை நிறுத்தியுள்ள நிலையில் கனடா இந்த உதவிகளை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.